Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 12 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :114 பங்குனி 09ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 22 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி



“இங்க நடந்தது அந்த வெலிக்கடைச் சம்பவம் மாதிரி இல்லைத்தானே.....”

## கொரோனா வைரஸ் பீதி

# அ’புரம் சிறைக்குள் களேபரம்

# இரு கைதிகள் சுட்டுக் கொலை

### தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதிப்பில்லை

அநுராதபுரம், மார்ச் 22

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நேற்று மாலை இடம்பெற்ற பெரும் களேபரத்தின்போது பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதிகள் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும், மூவர் படுகாயமடைந்துள்ளனர். 02



## நாடு முழுவதும் நாளை ஊரடங்கு

# காலையில் தளர்வு மாலையில் அமுல்!

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் நாளை காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு மீண்டும் பி.ப. 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு, கம்பஹா, புத்தளம் மாவட்டங்களில் தற்போது 02

## மே 14க்கு பின்னரே பொதுத்தேர்தல்!

### வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மார்ச் 22

பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. நாட்டில் பரவியுள்ள கொரோனா வைரஸின் ஆபத்தான நிலை காரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டவாறு பொதுத் தேர்தலை 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் 02

## தேர்தல் திணைக்களம் பூட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 22

கொரோனா அச்சம் காரணமாக தேர்தல் திணைக்களம் எதிர்வரும் 30ஆம் திகதிவரை இயங்க மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,105)

## 180 பேர் கைது

கொழும்பு, மார்ச் 22

ஊரடங்கு சட்டதை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 180 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப் 02

## 210 யாத்திரிகர்கள் வடக்கு மையங்களில்

கொழும்பு, மார்ச் 22

கொரோனா வைரஸ் ஆபத்தையடுத்து இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்ட 210 இலங்கைப் பிரஜைகள் நேற்று நாடு திரும்பினர். நாடு திரும்பிய அனைத்து யாத்திரிகர்களும் தனிமைப்படுத்தி கண்காணிக்கும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 170 பேர் இரணைமடு இராணுவத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையத்துக்கு அனுப்பி 02

## 77 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 5 பேர் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று சந்தேகத்தில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நால்வருக்கும், 02

## 3 பேர் யாழில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருந்தபோது வீதியில் நடமாடிய மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ் பிரி 02

## பதற்றம் வேண்டாம்

### பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22

அரியாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவசரப்பட்டு பதற்றத்துடன் உண்மையை உறுதிப்படுத்தாமல் செய்திகள் வெளியிடப்படுவதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். 02

## கொரோனாவை ஒழிக்க அரச ஊழியர் களத்தில்!

### இராணுவத் தளபதி திட்டம்

கொழும்பு, மார்ச் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுள்ளோருடன் தொடர்புகளைப் பேணிய 11 ஆயிரம் 482 பேர் 02

# கொரோனா பலி 12,000

பீஜிங், மார்ச் 22
கொரோனா வைரஸால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தைத் தாண்டியது.
சீனாவின் வுகான் மாகாணத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் 170 நாடுகளில் பரவியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் தற்போது மிக அதிக உயிரிழப்பு ஏற்படுகின்றது. இந்த நிலையில் கொரோனாவால் ஒட்டுமொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்று உத்தியோகபூர்வமான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. (ம)



# தாதியத்தின் உன்னதம்
## தலைவணங்குகிறது யாழ்ப்பாணம்!

நேற்றுவரை உலகம் முழுவதும் 19 மருத்துவர்கள் கடமையின் போது ஏற்பட்ட நோய்த் தொற்றால் - கொரோனோவால் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 500க்கும் அதிகமான சுகாதார உத்தியோகத்தர்கள் கொரோனோ தொற்றுக்கு ஆளாகியிருக்கின்றனர்.
இலங்கையில் இதுவரை 77 பேருக்கு கொரோனோ நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கொரோனோ வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை வழங்கவென யாழ். போதனா வைத்திய சாலையில் தனியான விடுதி திறக்க ப்பட்டு அங்கு கடமையாற்றவென தனியான ஆளணியினரைத் தெரிவு செய்து போது பல தாதிய சகோதரிகள் தாமாகவே முன்வந்தனர். குறிப்பாக இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமை யாற்றும் சிரேஷ்ட தாதிய சகோதரி ஒருவர் தாமாகவே முன்வந்து கொரொனா சிகிச்சைப் பிரவில் கடமையைப் பொறுப்பேற்றமை தாதியத்தின் உன்னதம் மங்காத அர்ப்பணிப்பு மிக்க தாதியர்கள் பலர் எமது பகுதியில் இருக்கின்றமையைக் காண்பிக்கிறது.
மிகுந்த நெருக்கடியான இந்த நேரத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உதயன் தலை வணங்குகிறது.
இலங்கையில் உள்ள போதனா வைத்தியசாலைகளில் யாழ். போதனாவிலேயே மிகக்குறைந்த எண்ணிக்கையான தாதியர்கள் மிகுந்த வேலைப் பளுவுக்கு மத்தியில் இரவு பகலாகக் கடமையாற்றி வருகின்றனர்.

### அ'புரம்..

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்கள் அங்கிருந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து சிறைச்சாலைக்குள் குழப்பமின்மை ஏற்பட்டது.
அங்குள்ள ஏனைய கைதிகள் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து சிறைக்கூடங்களைத் தகர்த்துக்கொண்டு முற்றத்தில் ஒன்றுகூடினர்.
சிறைச்சாலையில் அறிவித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற கையடக்க ஒலி பெருக்கியைப் பயன்படுத்தி தங்களை வெளியில் செல்ல அனுமதிக்கக் கோரியும், வேறு சிறைகளுக்கு மாற்றுமாறு வலியுறுத்தியும் சுமார் 500 கைதிகள் இணைந்து கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், சிறைக்குள் அவர்கள் தீயும் வைத்தனர்.
பொலிஸாரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதும், சிறப்பு அதிரடிப் படையினர் அங்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதன்போது தடைகளையும் மீறி கைதிகள் பலர் தப்பியோட முயற்சித்தனர். அவர்களில் சிலரை மடக்கிப் பிடித்த பாதுகாப்புத் தரப்பினர் ஏனையோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தச் சம்பவத்தில் கைதிகள் 5பேர் காயமடைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் நேற்றிரவும் மற்றையவர் இன்று அதிகாலையும் உயிரிழந்துள்ளதாக போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் துலான் சமரவீர தெரிவித்தார்.
அநுராதபுரம் சிறைச்சாலை நேற்றிரவு கட்டுப்பாட்டுக்குள் முழுமையாகக் கொண்டு வரப்பட்டதாக சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்தது. (ஓ,5,22)

### காலையில்..

நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு சட்டம் நாளை மறுதினம் செவ்வாய் காலை 6.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 2மணிக்கு அம்மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படும்.
ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நாளை திங்கட் காலை 6 மணிக்கு நீக்கப்படுவதுடன், மீண்டும் அதே தினம் பிற்பகல் 2 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படும். இம்மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு சட்டம் நாளை மறுதினம் செவ்வாய் காலை 6 மணி வரை நடைமுறையில் இருக்கும்.
அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்படுவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஓ,5)

### 180 பேர்..

பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 10 மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சக்கர வண்டி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஓ,5)

### 210...

வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அதேவேளை, கேப்பாப்பிலவு விமானப் படைத் தளத்தில் 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ஓ,5,22)

### பதற்றம்...

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
அரியாலைப் பகுதியில் ஆராதனை நடத்திய மதகுருவுக்கு தொற்று இருப்பது பற்றி உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வந்து சேரவில்லை. அவருக்கு தொற்று இருந்தாலும் இங்கு பலருக்கு தொற்று ஏற்பட வாய்ப்பு குறைவு. அவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தால் இங்குள்ள ஒரு சிலருக்கு தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. தொற்று ஏற்பட்டிருக்கும் ஒரு சிலரும் எந்தவிதமான நோய் அறிகுறியும் காணப்படாமல் இருக்கலாம்.
மத குருவுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டால் அவரோடு நேரடியாக தொடர்பு கொண்ட அனைவரும் அவர்களது வீட்டில் இரண்டு கிழமைகள் தனியாக இருந்து கொள்ள வேண்டும். அவ்வாறானவர்களின் சுவாச வியாதி மற்றும் ஏனைய பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது மருத்துவமனைகளுடன் தொடர்பு கொண்டு சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.
தொற்று உறுதி செய்யப்பட்ட ஒருவரோடு நேரடி தொடர்பு கொண்ட ஒருவருக்கு சுவாச மற்றும் அதனோடு தொடர்புடைய வியாதிகள் ஏற்படுகின்றபோது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு தொற்று இருக்கின்றதா என்ற பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டால் பல்வேறு நோய்களால் வருகின்ற சுவாச வியாதிகள் ஏனைய வியாதிகளுக்கு பொதுமக்கள் மருத்துவமனைக்குச் செல்லாத நிலை ஏற்பட்டு அசௌகரியமான சம்பவங்கள் நடைபெற வாய்ப்புண்டு, என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ,5,20)

### 3 பேர்...

வுக்கு உட்பட்ட இளைஞர்கள் மூவரும் சுமார் 20 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள். (ஓ,5,106)

### 77...

கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்கும் நேற்று நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 72 இலிருந்து 77 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.
இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரில் 72 வீதமானவர்கள் ஆண்கள் என சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.
245 பேர் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார். (ஓ,5,22)

### கொரோனாவை...

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். எனினும், கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணிய மேலும் பலர் இருக்கக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார். எனவே, சமூகப் பொறுப்புணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும், சுயமாக தனிமையாகி கண்காணிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில்கொண்டு வெளிநாடுகளில் இருந்து வருகை தந்துள்ளவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கும் பட்சத்தில், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். கொரோனா தொற்றை இல்லாதொழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.
வெளிநாட்டுக்குச் சென்றமைக்கான காரணம் அல்லது அங்கிருந்து நாட்டுக்குத் திரும்பியமைக்கான காரணம் தொடர்பில் தற்போது ஆராயப்படாது. எனவே, வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் எவ்வித அச்சமும் இன்றி தங்களைப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும்.
நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தேவை ஏற்படும் பட்சத்தில் 34 அரச நிறுவனங்களின் ஊழியர்களைக் கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்புக்குப் பயன்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆகவே, அனைத்து அரச ஊழியர்களும் இதற்கு எந்நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றார். (ஓ,5,22)

### மே 14க்கு...

திகதி நடத்த முடியாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்தெடுக்கும் வாக்கெடுப்புத் தினம் ஏப்ரல் 30ஆம் திகதியிலிருந்து 14 நாள்கள் பின்னர் ஒரு தினம் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.
இதுதொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## மதுபான விற்பனை நிலையங்களை திறக்க முடியாது

கொழும்பு, மார்ச் 22

ஊரடங்கு சட்டம் நீக்கப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாடு முழுவதிலும் உள்ள மது பானசாலைகள் மூடப்பட்டிருக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாவட்டங்களில் விவசாய சமூகத்துக்கு தங்களது பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு இடமளிக்குமாறு அரசு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் போதுமானளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதால் தேவையற்ற வகையில் பொருள்களை சேமிப்பதில் குழப்பமடையத் தேவையில்லை என்று அரசு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது. மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கொண்டுசெல்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அத்தியாவசிய உணவுப்பொருள்களைத்தடையின்றி தேவையான இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ,5)

## வீட்டில் இருக்க முடியாதோருக்கு பொலிஸ் எச்சரிக்கைகள்!

**யாழ்ப்பாணம், மார்ச் 22**

**ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வீட்டில் இருக்க முடியாதவர்களுக்கு பொலிஸார் சில எச்சரிக்கை அறிவுறுத்தல்களை துண்டறிக்கைகளில் விடுத்துள்ளனர்.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. (499 சாவடிகளுக்கு பதில் 998 சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.)

இந்தச் சாவடிகளைக் கடந்து செல்லும் வாகனங்கள் அனைத்தும் சோதனை செய்யப்படும், தகுந்த காரணங்கள் இன்றி

1. பயணம் செய்யும் வாகனம் பொலிஸ் வசப்படுத்தப்படும்.
2. வாகன சாரதிக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
3. வாகன உரிமையாளருக்கு வழக்குப் பதிவு செய்யப்படும்.
4. வாகனத்தில் இருந்த அனைவரும் கட்டாயமாக தனிமைப்படுத்தி கண்காணிக்கப்படும் முகாம்களுக்கு அனுப்பப்படுவர்.
5. வாகனத்தின் போக்குவரத்து வழிப்பத்திரம் இடைநிறுத்தப்படும்.

வாலிபர்களைத் தயவு செய்து வீட்டின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், அதேபோல் சில வீடுகளில் இருக்கும் பெண்கள் லீவு கிடைத்து விட்டால் போதும், தங்கச்சி வீடு, அம்மா வீடு என்று எங்காவது சென்றுவிடுவர்.

ஓரிடத்தில் இருக்கும் வரை நோய்த் தொற்றின் வேகம் குறைந்து கட்டுப்பாட்டுக்கு வரும்- எனத் தெரிக்கப்பட்டுள்ளது. (த-159)

## சுயதனிமைப்படுத்தலே மிகச் சிறந்த பாதுகாப்பு

*முன்னாள் எம்.பி. சரவணபவன் அறிவுறுத்தல்*

யாழ்ப்பாணம், மார்ச் 22

கொரோனா வைரஸ் தொற்று இலங்கை முழுவதையும் ஆட்டிப்படைகின்றது. மக்கள் மத்தியில் தேவையற்ற பயப் பீதியும் ஏற்படுத்தப்படுகின்றது. மக்கள் தம்மை தாமே சுய தனிமைப்படுத்துவதன் ஊடாக இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள் தொடர்பில் சுகாதாரத் துறையினரால் போதுமானளவு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் வைரஸ் தொற்றுத் தொடர்பில் எமது சிறு அலட்சியங்கள் பலருக்கு ஆபத்தாக மாறுகின்றது. அதனை நாம் உணர மறுக்கின்றோம். சுய தனிமைப்படுத்தலே இந்த நோய்கான சரியான நிவாரணம்.

அரசு இந்த வேளையில் ஊரடங்குச் சட்டத்தை அறிவித்துள்ளது. மக்களை வீடுகளுக்குள் முடக்குவதன் ஊடாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனை வரவேற்கும் அதேவேளை, அன்றாடச் சம்பளத்தை நம்பியிருக்கும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான எந்த உதவியும் இதுவரை அறிவிக்காதது வேதனையை ஏற்படுத்துகின்றது. இதனை விட ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில், பொதுமக்கள் சந்தைகள், வர்த்தக நிலையங்களில் ஒரே நேரத்தில் பலர் திரளப் போகின்றனர். இதனால், வைரஸ் பரவுவதற்கான அபாயம் உள்ளது. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இது தொடர்பில் விரைந்து சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்று கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ,5)

## ஊரடங்கை மீறிய 9 பேர் வாழைச்சேனையில் கைது

வாழைச்சேனை, மார்ச் 22

வாழைச்சேனையில், கடந்த 24 மணிநேரத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் வகையில், நேற்று முன்தினம் முதல் நாளைவரை 60 மணித்தியாலங்கள் ஊரடங்குச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. அரசின் அறிவித்தலை அலட்சியப் படுத்தி, ஊரடங்குச் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டியே குறித்த 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் மது போதையில் பயணம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்கள் நடமாடுவதைத் தவிர்த்து கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முழு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். மீறும் பட்சத்தில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்றும் அறிவித்து வருகின்றனர். (ப -150)

## கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து விசிறல்

சாவகச்சேரி, மார்ச் 22

சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்று கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து தெளிகருவி மூலம் விசிறப்பட்டது

சாவகச்சேரி பேருந்து நிலையம், பொதுச் சந்தை, மருத்துவமனை, பிரதேச செயலகம் மக்கள் அதிகம் காணப்படும் பகுதிகள் போன்ற இடங்களில்

சாவகச்சேரி நகர பொது சுகாதார பரிசோதகர் பி தளிர்ராஜ் தலைமையில் நகரசபை பணியாளர் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து விசிறப்பட்டது.

இதேவேளை, கொடிகாமம் ,எழுதுமட்டுவாழ், வரணி, கைதடி. போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த. பொது மக்கள் நடமாடும் இடங்களில் மருந்து விசிற. ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் தெளிகருவி இன்மையால் தாமதமடைவதாகச் சுகாதாரத்திணைக் களத்தினர் தெரிவித்தனர். (ஐ-9)

## ரூ. 105 மில். பெறுமதியான சுகாதார உபகரணங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 22

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார நிறுவனம் இலங்கைக்கு நன்கொடை வழங்கியுள்ளது.

105 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் உலக சுகாதார நிறுவனத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் பங்களிப்புடன் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்கான சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் உலக சுகாதார நிறுவனத்தால் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ,5)





# யாழ். மறை மாவட்டத்தில் வழிபாடுகளுக்குத் தடை

**யாழ்ப்பாணம்,மார்ச் 22**

**கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் விதமாக யாழ் மறைமாவட்டத்தின், அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் மறு அறிவித்தல் வரை அனைத்து ஆலய செயற்பாடுகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்படுகிறது என்று யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று ஞாயிறு தினத்தை உபவாச, செப தினமாக அனுசரிக்குமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோளை யாழ் மறைமாவட்டத்தில் குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவும்.

அனைவரும் வீட்டிலிருந்தவாறு தனியாகவோ, குடும்பமாகவோ திருச்செபமாலை, திருமணித்தியாலம், இறை இரக்கச் செபம், திருச்சிலுவைப்பாதை, வியாகுலபிரசங்கம் போன்ற பக்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும்.

கண்டியில் அன்று கொள்ளை நோய் வந்தபோது பேராபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றிய இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளார் மற்றும் மனுக்குலத்தின் தாயாக விளங்கும் தேவதாயரிடம் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இலங்கை நாடு பாதுகாக்கப்பட உருக்கமாக மன்றாடுங்கள்.

மக்கள் ஒன்று கூட்டும் எந்த ஒரு நிகழ்வையும் ஒழுங்கு செய்ய வேண்டாமென பங்குத்தந்தையர்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள். மரணச் சடங்கு, திருமுழுக்கு போன்ற தேவைகளுக்கு பங்குத்தந்தையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரிய ஒழுங்குகளைச் செய்யவும். இந்தப் பயங்கரமான தொற்றுநோய் மேலும் பரவாமல் உலக மக்கள் அனைவரையும் இறைவன் பாதுகாக்கப்பட இறையாசீர் வேண்டுகிறோம். என்றுள்ளது.

(க)

## கொரோனா அச்சம்
# காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை நிறுத்த தீர்மானம்

மன்னார், மார்ச் 22

தலைமன்னாரில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி செயற்திட்டத்தை நிறுத்துமாறு, மன்னார் பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் விஷேட அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைமன்னார், பேசாலைப் பகுதிகளில் காற்றாலை அமைக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபையில் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அதன் தவிசாளர் எம்.எச்.எம்.முஜாஹிர் தெரிவித்தார்.

நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் இருப்பதற்கு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது மன்னார் பகுதியில் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அண்மையில் தென்னிலங்கையில் இருந்து கனரக வாகனங்களில் இராட்சதக் காற்றாடிகள் கொண்டு வரப்பட்டன.

காற்றாடிகளைப் பொருத்தி வேலைகளை செய்வதற்கு வெளிநாட்டவர்களே வருகை தந்துள்ளனர்.

அவர்கள் சுற்றுலா விடுதிகளிலும், வீடுகளை வாடகைக்கு எடுத்தும் தங்கியுள்ளனர்.

அவர்கள் உண்மையில் கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்களா என்று தெரியவில்லை அத்துடன் புதிது புதிதாகவும் வெளிநாட்டவர் சுற்றித்திரிவதால் எம்மால் அடையாளம் காண முடியவில்லை.

இதன் மூலம் மன்னாருக்கு கொரோனா ஆபத்து வரக்கூடும். எனவே தற்போதைய அவசர காலத்தில் காற்றாலை மின் உற்பத்தி செய்யும் வேலைத்திட்டத்தை நிறுத்தி, மக்களை அச்சத்தில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்று மன்னார் பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானம் உடனடியாக ஜனாதிபதிக்கும், மன்னார் மாவட்டச் செயலருக்கும் கிடைக்கும் வகையில் தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று மன்னார் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.எம் முஜாஹிர் மேலும் தொவித்தார்.

(க-213)

# அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தவும்
## சிவமோகன் கோரிக்கை

வவுனியா, மார்ச் 22

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள கைதிகள், பாதுகாப்புக்கோரி ஏற்படுத்திய நடவடிக்கை கலவரமாகியதால் அங்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து தமிழ் அரசியல் கைதிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளாவது:

கொரோனா வைரஸ் தொற்றாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்த சில கைதிகள் இன்றுமாலை (நேற்று) மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, தமது மருத்துவ பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தம்மை விடுவிக்குமாறு கோரி ஏனைய கைதிகள் சிறைக்காவலர்களுடன் முரண்பட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இதனால் கைதிகள் சிறைக்கூடங்களின் கதவுகளை உடைத்து பிரதான கதவை உடைக்க முற்பட்டபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அதன்போதே மூன்று கைதிகள் படுகாயமடைந்த நிலையில் உயிர் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை அரசு உடனடியாக உறுதிப்படுத்தி அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளும் வீசப்படுகின்றன. அதனால் அங்குள்ள கைதிகள் அனைவரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அங்குள்ள கைதிகள் அனைவரையும் இந்த அரசு மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றுள்ளது. (த-110)

# உலக மக்கள் நலம்பெற வேண்டி திருக்கேதீச்சரத்தில் மகா யாகம்





மன்னார்,மார்ச் 22

உலகத்தையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்கள் நலம்பெற வேண்டி மன்னார் திருக்கேதீச்சரர் ஆலயத்தில் நேற்று மகா யாகம் நடைபெற்றது.

திருக்கேதீச்சர திருப்பணிச்சபையினர் ஏற்பாட்டில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் இந்த மகா யாகம் நடைபெற்றது.

ஊடரங்கு நேரத்தில் பாதுகாப்பு தரப்பினரின் அனுமதி பெறப்பட்டு மகா யாகத்துக்கு தேவையான குருக்கள் மாத்திரமே இதில் பங்கு கொண்டனர். (ஐ-213)

# ஊரடங்கு காலத்திலும் உறவுகள் போராட்டம்

வவுனியா,மார்ச் 22

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுழற்சி முறையிலான போராட்டம், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கொரோனா தொற்றைத் தடுக்கும் ரீதியில் நாடு முழுவதும், ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக வவுனியாவில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நடமாட்டம் இன்றி வவுனியா நகர் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

எனினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால், வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக 1127 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும், சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. (க-110)





# மனிதாபிமான உதவி

யாழ்ப்பாணம்,மார்ச் 22

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளிகளான உறவினர்களுடன், பராமரிப்பதற்காக துணைக்கு வந்தவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஊரடங்குச் சட்டம் காரணமாக உணவுப் பிரச்சினையை அவர்கள் எதிர்நோக்கியமையால், இரவுக்குரிய உணவுப் பொதிகள் யாழ் எய்ட் அமைப்பினரால் நேற்று வழங்கப்பட்டன.

தேவைக்கு ஏற்ப இன்றும் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




## யாழ். நகரப் பகுதிகளுக்கு கிருமிநீக்கி மருந்து விசிறல்

யாழ்ப்பாணம்,மார்ச் 22

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்க, மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களில் ஓர் அம்சமாக, யாழ் நகர் மற்றும் மத்திய பஸ் நிலையப் பகுதிகளில் தொற்று நீக்கி மருந்து தெளிக்கும் விசேட செயற் திட்டம், யாழ் மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், மாநகர ஆணையாளர், மாநகர சுகாதார வைத்திய அதிகாரி, மாநகர சுகாதாரப் பிரிவினர், மாநகர உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். (க)

# தாவல் மன்னர்களுக்கு ஆப்பு வைத்த கட்சிகள்!

## தேசியப் பட்டியலிலும் இடமில்லை

**கொழும்பு, மார்ச் 22**

**கட்சி தாவலுக்குப் பெயர் போன சில அரசியல்வாதிகளுக்கு பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் இம்முறை வாய்ப்பு வழங்கவில்லை. தேசியப் பட்டியலிலும் அவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை.**

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க, முன்னாள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தப்பா ஆகியோருக்கே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சியின் போது இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என மூன்று தடவைகள் வசந்த சேனாநாயக்க கட்சி தாவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் மஹிந்தவை கைவிட்டுவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த எஸ்.பி. நாவின்ன, மீண்டும் ராஜபக்சக்கள் பக்கம் ஓடினார். பின்னர் சஜித்துக்கு ஆதரவு வழங்கினார்.அண்மையில்மொட்டுக் கட்சி பக்கம் தாவினார்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த பைசர் முஸ்தப்பா, காலபோக்கில் சுதந்திரக் கட்சியில் இணைந்தார். மஹிந்தவுடனும் நெருங்கிப் பழகினார். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்ற பின்னர் மஹிந்த பக்கம் இருந்து மைத்திரிக்கு ஆதரவளித்தார்.

எனினும், கட்சிதாவி சர்ச்சைக்குள்ளான முன்னாள் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் இம்முறை பதுளை மாவட்டத்தில் சஜித் அணியில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகிறார்.

அதேவேளை, சஜித், ரணில் ஆகிய இரு தரப்புகளையும் இணைப்பதற்கு பாடுபட்ட முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை என்பதுடன், அவருக்கு இரு தரப்பினதும் தேசியப்பட்டியலில் இடமில்லை. (ஒ,5,44)

# வீடுகளில் இருப்பதே தற்போதைக்கு நல்லது

## மு.கா. அறிவுரை

கொழும்பு, மார்ச் 22

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் வீடுகளை விட்டு வெளிவராமல் இருக்கவேண்டும். இதுவே தற்போதைய நிலைமையில் நல்லது. இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தை மதித்து முப்படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், இந்தக் கால கட்டத்தில் வீணான பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம் எனவும் இளைஞர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துச் செல்வதைத் தடுப்பதற்காக அரசும், சுகாதார அமைச்சும், முப்படைகளும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை குறித்து கூடுதல் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஒ,5,22)

# அண்ணன் ரணிலுடன் தம்பி சஜித்துடன்!

கொழும்பு, மார்ச் 22

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக போர்க்கொடி தூக்கி, ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றார் நவீன் திஸாநாயக்க.

எனினும், அவரின் தம்பியான மயந்த திஸாநாயக்க வுக்கு சஜித் அணியின் தேசியப்பட்டியலில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பலகோணங்களில் விமர்ச னங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

2015ஆம் ஆண்டு இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் களமிறங்கிய மயந்த திஸாநாயக்க, வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,44)

## மட்டு. மருத்துவமனையில்

# 2ஆவது கொரோனா தொற்றாளர் சேர்ப்பு

மட்டக்களப்பு,மார்ச் 22

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில், இரண்டாவது கொரோனா தொற்றுக்குள்ளானவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு ரிதிதென்னையில் உள்ள கொரோனா தனிப்படுத்தப்பட்டுள்ளவர் முகாமில் இருந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் இருந்து கொண்டு வரப்பட்டு, தனிப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 55 வயதுடைய நபரே பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் பாணந்துறையைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்படுத்தல் முகாமில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான பரிசோதனைக்காக இரத்தமாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (க-150)



# அரச அலுவலருக்கு கொரொனோ இல்லை

வவுனியா,மார்ச் 22

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவர், கொரோனா வைரஸ் தாக்கியுள்ளதா என்னும் சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த குறித்த நபர் வெளிநாட்டில் வசிப்போருடன் தொடர்புகளைப் பேணியதன் காரணத்தால், சந்தேகத்தின் அடிப்படையில் அம்புலன்ஸ் வாகனம் மூலம் வவுனியா பொது வைத்தியசாலையின் தொற்றுநோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரின் இரத்த மாதிரிகளைப் பெற்று அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைத்தனர்.

அவரது பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றவில்லை என்று வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (க-110)

# வவுனியாவில் எண்மர் கைது

வவுனியா,மார்ச் 22
வவுனியாவில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வீதியில் நடமாடிய எண்மர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.
அவர்களில் 6 பேர் போக்குவரத்து விதி மீறல் குற்றங்களுக்காகவும், இருவர் அவசியமின்றி வீதிகளில் நடமாடியமைக்காகவும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சிலர் விடுவிக்கப்பட் டுள்ளனர்.



அதேவேளை ஆதரவற்ற சிலர், வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். உணவின்றியும் தவித்து வருகின்றனர். வவுனியாவுக்கு வேலை நிமித்தம் வருகை தந்த சிலர் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் இன்றி வீதிகளில் காத்திருந்தனர். அவர்கள் வீதிகளில் நடமாடுவதற்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது.
(க-110)





## கொரோனா தொற்று;
# மக்களுக்கு விழிப்புணர்வு

முல்லைத்தீவு,மார்ச் 22
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையின் தன்னார்வலர்கள் மற்றும் பணியாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக கொரோனா தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர்ப்பகுதி மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
கொரோனா வைரஸ் தொற்று மற்றும் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (க-19)

# ஊரடங்கு நேரத்தில் யாழில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 22
**நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையிலும், யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவம் நடந்துள்ளது.**



அரியாலை நாவலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியுள்ளது. இதன் போது ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
வாள்வெட்டுக்கு இலக்கானவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாள்வெட்டு நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (க)

# கிருமி நீக்கப்படும் களுவாஞ்சிக்குடி

மட்டக்களப்பு,மார்ச் 22
மக்கள் நடமாட்டம் இல்லாதை அடுத்து களுவாஞ்சிக்குடியில் பொது இடங்களில் கிருமி நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், நாட்டில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.
களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள பொதுச்சந்தை அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் காரியாலயங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டுள்ளன. வீதிகளில் எதுவித வாகனங்களோ, சன நடமாட்டங்களோ காணப்படவில்லை.
இராணுவத்தினர், பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.
அதேவேளை பஸ் தரிப்பிடம் மற்றும் பொது இடங்களில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் சுகாதார உத்தியோகத்தர் கிருமி அழிப்புச் செயற்பாடுகளை நேற்று முன்னெடுத்தனர். (க-46)



# கை கழுவிய பின்னர் மருத்துவமனைக்குள் நுழையவும்

*அத்தியட்சகர் கோரிக்கை*

சாவகச்சேரி, மார்ச் 22
சாவகச்சேரி மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வரும் பொதுமக்கள் அனைவரும் வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள தண்ணீரில் கை கழுவி சுத்தம் செய்த பின்னர் உள்ளே வருமாறு மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் அறிவித்துள்ளார் .
தொடுகைகளால் கொரோனா பரவுவதைத் தடுப்போம், என்னும், தொனிப் பொருளில் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னர் தண்ணீரும் தொற்றுநீக்கி சோப்பும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றினைப் பயன்படுத்தி. நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம் எனவும் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் அவர்களைப் பார்வையிடவருவோர் அனைவரும் கட்டாயம் கைகழுவி சுத்தமாக வருகை தாருங்கள் என்று அத்தியட்சகர் மேலும் அறிவித்துள்ளார். (க-9)

# நகரில் நடமாடிய முச்சக்கர வண்டி

மன்னார், மார்ச் 22
ஊரடங்கு உத்தரவு நேரத்தில் உப்புக்குளத்திலிருந்து மன்னார் நோக்கி, முச்சக்கர வண்டியில் வந்த சிலர், பொலிஸாரால் திருப்பியனுப்பப்பட்டனர்.
இரண்டு வாரங்களுக்கு மேலாக மன்னாரில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் அரச மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தன.
ஊரடங்குச் சட்டம் என்று அரசு அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் மன்னார் நகரம் அமைதியானது. இந்த நிலையில் மன்னார் உப்புக்குளம் பகுதியில் இருந்து நகரப்பகுதிக்கு முச்சக்கர வண்டியில் வந்தவர்கள், கடைகளைப் பார்வையிட்டவாறு நின்றனர்.
அவர்களை அழைத்த பொலிஸார் ஏன் இங்கு வந்தீர்கள் என்று வினவினர், தாம் நகருக்கு அத்தியாவசிய பொருள்கள் வாங்க வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். அவர்களைப் பொலிஸார் எச்சரித்து திருப்பி அனுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-213)

# தனிமைப்படுத்தலுக்கென கிளிநொச்சிக்கு 175 பேர்

கிளிநொச்சி, மார்ச் 22
கிளிநொச்சி இரணைமடு படை முகாம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில் 175 யாத்திரிகர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
அவர்கள் நேற்று சனிக்கிழமை காலை இந்த நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியாவுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள். இவர்கள் 14 நாள்களுக்கு இங்கு தங்கவைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் இந்தச் சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றுவார். கொரோனா வைரஸ் தொற்று இனம் காணப்பட்டால் அவர்கள் உடனடியாக அங்கிருந்து யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-214)






நாட்டில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் மருத்துவத்துறையினர் கொரோனா விழிப்புணர்வு பாதுகாப்பு கடமையில் நேற்று ஈடுபட்டனர்.யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் இந்த சேவையை அனைத்து துறையினரும் இணைந்து நேற்று மேற்கொண்டனர். (ஜ7)

# எந்தவொரு பொருளுக்கும் நாட்டில் தட்டுப்பாடில்லை

## பிரதமர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

**அத்தியாவசியப் பொருள்கள் உள்பட எந்தப் பொருள்களுக்கும் நாட்டில் தட்டுப்பாடில்லை என்று பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப் பட்:டுள்ளதாவது,

சந்தையில் எந்தப் பொருள்களும் தட்டுப்பாடின்றி மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதனது செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

சதொச தனது பிரதான களஞ்சியங்களிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கையை நேற்றும் முன்னெடுத்தது.

எந்தத் தட்டுப்பாடுமின்றி சந்தையில் எரிவாயுவை விநியோகிக்க முடியும் என்று லிட்ரோ காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது என்றும் அதில்குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5)

# கொரோனாவைத் தடுக்க விரிவுரையாளர் அறிவுரை

கொடிகாமம், மார்ச் 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜி.திருக்குமரன் நோய் ஆபத்தான நிலையில் எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகள் சிலவற்றை கூறியுள்ளார்.

1. திங்கட்கிழமை சில மணி நேரங்கள் மட்டும் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ள நிலையில் அவசிய தேவை ஏற்பட்டால் மட்டும் வெளியே செல்லுங்கள். அதுவும் பாதுகாப்பான ஏற்பாடுகளுடன் மட்டும். கடைகளில் பொருள்களை வாங்கும் போது குறித்த தூரத்தை பேணுங்கள். கடைகளில் வேலை செய்பவர்கள் கட்டாயம் மாஸ்க் மற்றும் கையுறை அணிந்து கடமையாற்றுங்கள்.

2. ஊரடங்கு நேரத்தில் அத்தியாவசிய பொருள்களை வீடு வீடாகக் கொண்டு சென்று விற்பனை செய்வதை ஒழுங்கு செய்யலாம். இதனை சங்கக்கடை போன்ற அமைப்புக்கள் மூலம் ஒழுங்கு செய்யலாம். இதனால் தேவையற்ற சன நடமாட்டத்தைக் குறைக்கலாம்.

3. சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தி பரிசோதிப்பவர்களை ஓரிடத்தில் வைத்து பராமரிக்காமல் அவரவர் வீடுகளில் வைத்து கவனிப்பது மேலும் பரவுவதை வெகுவாகக் குறைக்கலாம். சந்தேகத்தில் தனிமைப்படுத்துபவர்களையும் நோய் உள்ளவர்களையும் ஒன்றாக தங்க வைப்பதால் நோய் வர வாய்ப்புண்டு. அத்துடன் தனிமைப்படுத்தி பரிசோதிப்பவர்களுக்கு கைகளில் ஓர் அடையாளத்தை ஒட்டியோ அல்லது மோதிரம் போன்ற ஒன்றை கழற்றாதவாறு பொருத்திவிடுவதன் மூலம் ஏனையவர்கள் அவர்களிடத்திலிருந்து குறித்த காலத்துக்குத் தள்ளியிருக்க முடியும். கண்காணிப்பு நேரத்தில் களவாக வெளியேறினாலும் பொலிஸாரால் இலகுவாக இனங்காண முடியும்- என்றார். (த-159)

# 4 ஆயிரம் தொற்று நீக்கி இயந்திரங்கள் அன்பளிப்பு

கொழும்பு, மார்ச்22

கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக கிருமி தொற்றகற்றலுக்கு பயன்படுத்தப்படும் 4 ஆயிரம் தொற்று நீக்கி தெளிக்கும் இயந்திரங்கள் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மாகாண சுகாதார ஆணையாளர்களுக்கு இயந்திரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள அதிகார சபை கட்டிடத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

ஒரு இயந்திரத்தின் பெறுமதி 15 ஆயிரம் ரூபாவுக்கும் 20 ஆயிரம் ரூபாவுக்கும் இடையிலாகும். இதன் கொள்ளளவு 16 லீட்டர்களாகும்.

மருத்துவமனைகள், பொலிஸ், சிறைச்சாலை, பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் புகையிரத நிலையங்களுக்கு இயந்திரங்கள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ,5)



# கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப் பொதி

யாழ்ப்பாணம், மார்ச் 22

'விதையனைத்தும் விருட்சமே' செயற்திட்டத்தின் கீழ் காங்கேசன்துறைப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைவாக சித்திரமேழி பழனியானந்தன் சன சமூக நிலையம் ,கருகம்பனை இந்து இளைஞர் கழகம் ஆகியன இணைந்து காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறிய 15 கர்ப்பிணித் தாய்மார்கள் ஒருவருக்கு தலா ரூபா 2000 பெறுமதியான சத்துணவு பொதிகளை, மல்லாகத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்தில் வைத்து வழங்கினர். (அ-23)

# பதுளையில் இருவருக்கு கொரோனா?

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இருவர் பதுளை மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் வெலிமடை மற்றும் கலவுட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விவரங்கள் வெளியாகவில்லை. (க)

# உலக மக்கள் நலம்பெற வேண்டி திருக்கேதீச்சரத்தில் மகா யாகம்



மன்னார்,மார்ச் 22

உலகத்தையே ஆட்டிப்படைக்கும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்கள் நலம்பெற வேண்டி மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் நேற்று மகா யாகம் நடைபெற்றது.

திருக்கேதீச்சர திருப்பணிச்சபையினர் ஏற்பாட்டில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் இந்த மகா யாகம் நடைபெற்றது.

ஊடரங்கு நேரத்தில் பாதுகாப்பு தரப்பினரின் அனுமதி பெறப்பட்டு மகா யாகத்துக்கு தேவையான குருக்கள் மாத்திரமே இதில் பங்கு கொண்டனர். (ஐ-213)


# ஊடரங்கு நேரத்தில் விபத்து

## சிறுவன் சாவு

கொழும்பு, மார்ச் 22

பொலிஸ் ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற 17 வயது சிறுவன் நோயாளர் காவு வண்டியுடன் மோதி நேற்று மதியம் உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் வியாங்கொடை கலகெடிஹென பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. (ஒ.5)





# கொரோனா: நவீன பஸ்மாசுரன்?

நிலாந்தன்

இந்துப் புராணங்களில் பஸ்மாசுரன் என்று ஓர் அசுரன் உண்டு. தான் தொட்டதெல்லாம் பஸ்பமாக வேண்டும் என்று பஸ்மாசுரன் சிவபெருமானிடம் வரம் கேட்கிறான். வரம் கிடைத்ததும் எதிர்ப்படும் எல்லாரின் தலையிலும் கைவைக்க தொடங்குகிறான். அவன் தொட்டதெல்லாம் சாம்பல் ஆகிறது. அவனைக் கண்டதும் மூவுலத்தவரும் ஓடத் தொடங்குகிறார்கள். சிவபெருமானும் ஓட வேண்டியதாயிற்று. ஒரு கட்டத்தில் மகாவிஷ்ணு ஓரழகிய மோகினியாக மாறி பஸ்மாசுரனை மயக்கி அவன் தலையில் அவன் கையை வைக்கச் செய்கிறார்.

சீன அதிபர் கொரோனா வைரஸை ஓர் அரக்கன்என்று வர்ணித்தார். கொரோனா வைரஸிலிருந்து தப்புவது என்று சொன்னால் பஸ்மாசுரனிடமிருந்து தப்புவது போல ஒருவர் மற்றவரிடமிருந்து சற்று விலகி நிற்க வேண்டும். இப்பொழுது உலகம் முழுவதும் பிரச்சினையாக இருப்பது தொடுகை மூலம் கொரோனா வைரஸ் தொற்றிக் கொள்ளும் என்பது தான். எனவே அதிகபட்சம் தொடுகையைத் தவிர்க்கும் விதத்தில் மனிதர்கள் உதிரிகள் ஆக்கப்படுகிறார்கள். மனிதர்கள் ஒன்று கூடுவது தடுக்கப்படுகிறது. ஒன்று கூடும் இடங்கள் மூடப்படுகின்றன. நாடுகளின் எல்லைகள் மூடப்படுகின்றன. மனிதர்கள் கைகழுவிகளாகவும் முகம் மூடிகளாகவும் மாறிவிட்டார்கள். மனிதர்கள் நாளொன்றுக்கு அதிகம் தொடுவது பெற்றோர்களையா? அல்லது வாழ்க்கைத்துணைகளையா? அல்லது பிள்ளைகளையா? அல்லது கைபேசிகளையா? எதை அதிகம் தொற்று நீக்க வேண்டும்?

தொற்று நோய்க்கு இலக்கானவர்கள் அதிகம் தனிமைப் படுத்தப்படுகிறார்கள். இத்தாலி முதியவர்களை மரணத் திடம் கையளித்து விட்டது என்று கூறப்படுகிறது. அதாவது மனிதர்கள் ஒருவர் மற்றவரிலிருந்து பிரிந்து தொடுகையின்றி தனித்திருக்குமாறு அரசுகள் உத்தரவிடும் ஒரு காலம். ஒரு நோயைப் பொது எதிரியாக கண்டு யுத்தப் பிரகடனம் செய்யும் ஒரு காலம். இத்தனைக்கும் இது இன்டர்நெட் யுகம் அல்லது ஸ்மார்ட்போன் யுகம் அல்லது செல்ஃபி யுகம். மனிதர்களும் நாடுகளும் ஒன்று மற்றதிலிருந்து பிரிக்கப்பட முடியாதபடி ஒன்று மற்றதில் தங்கியிருக்கும் ஒரு யுகம். அதைத்தான் வேறு வார்த்தைகளில் பூகோளமயமாதல் என்று கூறுகிறோம்.

இன்டர்நெட்டும் நிதி மூலதனமும் நாடுகளையும் சந்தைகளையும் சமூகங்களையும் கண்டங்களையும் திறந்து கொண்டே போகும் ஒரு காலகட்டத்தில் ஒரு வைரஸ் வந்து எல்லாவற்றையும் மூட வைத்துவிட்டதா? பூகோளமயமாதலின் கீழ் திறக்கப்பட்ட சந்தைகள் சில மூடப்படுகின்றன. உதாரணமாக ஜெர்மனி தனது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முகஉறைகளை ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்திருக்கிறது. இத்தனைக்கும் அது ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாறாக முக உறைகளை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்திருக்கிறது. அப்படித்தான் துருக்கியும் ரஷ்யாவும் முகஉறைகளை ஏற்றுமதி செய்வதைத் தடுத்திருக்கின்றன. இது பூகோள மயப்பட்ட சந்தை நடவடிக்கைகளுக்கு மாறானது.

எவையெல்லாம் மனிதனின் முன்னேற்றங்கள் என்று கருதப்பட்டனவோ அவையெல்லாம் இப்பொழுது வைரஸ் பரவுவதற்கு காரணங்கள் என்று கருதப்படுகின்றன. கொரோனா வைரஸ் பூகோளமயமாதலின் பலவீனமான இழைகளை வெளிக்காட்டி இருக்கிறது. மனிதர்கள் ஒருவர் மற்றவரோடு பிரிக்கப்பட முடியாதபடி இணைக்கப்பட்டிருப்பதே பூகோளமயமாதல் ஆகும்.

ஆனால் ஒரு வைரஸ் வந்து மனிதர்களை தனியன்கள் ஆக்கிவிட்டது. உதிரிகள் ஆக்கி விட்டது. வீடுகளில் இப்பொழுது தனித்திருக்கும் மனிதர்கள் இன்டர்நெட் மூலம் இணைகிறார்கள்.

நோர்வே போன்ற நாடுகளில் பாடசாலைகளும் அலுவலகங்களும் மூடப்பட்டுவிட்டன. ஆனால் வீடுகளை இன்டர்நெட் மூலம் இணைத்து அங்கே பிள்ளைகளுக்கு படிப்பிக்கப்படுகிறது. அலுவலகங்கள் இயக்கப்படுகின்றன. சீனா கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு பெருமளவுக்கு இன்ரநெற்றைப் பயன்படுத்தியிருக்கிறது. பாதிக்கப்பட்ட மாகாணத்தில் கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி மக்கள் வீடுகளை விட்டு வெளிக்கிடாமல் ஒன் லைன் மூலம் உணவை உத்தரவிட்டுப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.



**தகவல் தொழில்நுட்பம் ஒருபுறம் மக்களை தனியன்கள் ஆக்குகிறது. உதிரிகள் ஆக்குகிறது. இன்னொரு புறம் அது அவர்களை இலத்திரனியல் திரட்சி ஆக்குகிறது. ஒரே சமயத்தில் அது மக்களைத் திரட்டுகிறது உதிரிகளும் ஆக்குகிறது.**

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது ஏற்கனவே மனிதர்களை தனித்தனியாக இலத்திரனியல் கருவிகளோடு மினக்கெடுபவர்களாக மாற்றியிருந்தது. இப்பொழுது கொரோனா வைரஸ் சமூக ஒன்றுகூடலை தடுக்கும் ஒரு காலகட்டத்தில் இலத்திரனியல் கருவிகளோடு பிணைக்கப்பட்ட மனிதர்கள் முழு அளவிற்கு தனியன்களாக உதிரிகளாக மாறியிருக்கிறார்கள். இது இருபத்தியோராம் நூற்றாண்டில் மட்டும் தான் நடந்தது என்பதல்ல. பதினான்காம் நூற்றாண்டில் பிளேக் நோய் ஐரோப்பாவை தாக்கிய போதும் இதே நிலைமைதான். அங்கேயும் மனிதகுலத்தின் சாதனைகளாக கருதப்பட்ட விரைந்த போக்குவரத்து, தொடர்பாடல், நகரமயமாதல், விரைந்த சமூக இடையுடாட்டம் போன்றனவே நோய் பரவுவதற்கு காரணங்களாயிருந்தன.

அப்படித்தான் கடந்த நூற்றாண்டில் 1918ம் ஆண்டு ஐரோப்பாவை தாக்கிய ஸ்பானிஷ் ஃப்ளு எனப்படும் ஒரு நோயும். அப்பொழுதும் விரைந்த தொடர்பாடலும் விரைந்த போக்குவரத்தும் தான் நோய் பரவுவதை விரைவாக்கின. 1967ல் பெரியம்மை நோய் கிட்டத்தட்ட 20 லட்சம் பேரை கொன்றது.

14ஆம் நூற்றாண்டின் பிளேக் நோய் கிட்டத்தட்ட அக்காலகட்டத்தில் காணப்பட்ட ஐரோப்பாவின் மொத்த சனத்தொகையில் 60 விகிதத்தை தின்று தீர்த்ததாகக் கூறப்படுகிறது. இத்தொகையானது பிரான்சுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான நூறு ஆண்டுகால போரில் கொல்லப்பட்ட மக்களின் மொத்தத் தொகையை விட அதிகம். அப்படித்தான் கடந்த நூற்றாண்டில் ஸ்பானிஷ் ஃப்ளுவினால் கொல்லப்பட்டவர்களின் மொத்த தொகை பத்துக் கோடி வரை வரும் என்று பிந்திய புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இது தொடர்பில் வரலாற்றறிஞர் பெனெடிக்ரோவ் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது. இத் தொகையானது முதல் இரண்டு உலகப் போர்களிலும் கொல்லப்பட்ட மக்கள் தொகையை விடவும் அதிகம். (https://www.historytoday.com/arciuve/blackdeath greatestcatastropheever) அதாவது உலகப் பெரும் தொற்றுநோய்கள் மனிதர்களின் உற்பத்தியான பெரும் போர்களை விடவும் அதிகரித்த சேதங்களை ஏற்படுத்துகின்றன.

இவ்விரண்டு நோய்த் தாக்கங்களின் போதும் இன்டர்நெட் இருக்கவில்லை. எனவே அந்நாட்களில் மனிதர்கள் நகரங்களை நீங்கி சன அடர்த்தி குறைந்த கிராமங்களை நோக்கிச் சென்றதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

மனித நாகரிகத்தின் வளர்ச்சி எனப்படுவது மனிதர்களுக்கு இடையிலான தொடர்பாடலை மேலும் மேலும் விருத்தி செய்வதுதான். நதிக்கரைகளில் முதல் நாகரீகங்கள் தோன்றிய பொழுது அங்கெல்லாம் பிரதானமாக எண்ணும் எழுத்தும் தான் நாகரீகம் அடைந்த மனிதனை அடையாளம் காண உதவின. அதாவது எண்ணையும் எழுத்தையும் கண்டுபிடித்து அதை விருத்தி செய்ய விருத்தி செய்ய மனிதனுடைய சிந்திக்கும் திறனும் வெளிப்பாட்டு திறனும் அதிகரித்தன. அவற்றின் இறுதி விளைவுகளாக மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடல் அதிகரித்தது. எனவே மனித நாகரீகம் எனப்படுவது ஒருவிதத்தில் தொடர்பாடலின் வளர்ச்சிதான். தொடர்பாடலை விரைவுபடுத்தும் எல்லா வளர்ச்சிகளும் மனித நாகரீகத்தை அடுத்தடுத்த கட்டகூர்ப்பிற்கு இட்டுச் சென்றன. அதாவது மனித நாகரீகக் கூர்ப்பு எனப்படுவது மனிதர்களை அவர்களுக்குள் இருக்கும் பல்வகைமைகளோடு ஆகக் கூடிய பட்சம் திரள் ஆக்குவதுதான். ஆனால் அதே திரட்சிதான் தொற்று நோய்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறது. இப்பொழுது பெரும்பாலான அரசாங்கங்கள் திரட்சிக்கு எதிராக கட்டளைகளைப் பிறப்பித்திருக்கின்றன.



(09ஆம் பக்கம் பார்க்க)

**இயற்கை அனர்த்தங்களின் போது எப்படி சமூகக் கூட்டொருமைப்பாடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள அரணாககவும் தெம்பாகவும் அமைகிறதோ அப்படித்தான் உலகப் பெரும் தொற்று நோய்களின் போதும் கூட்டொருமைப்பாடு அந்த நோயை எதிர்கொள்வதற்கு வேண்டிய உளவியல் பலத்தை வழங்கும்.**

(தொடர்ச்சி)



அதாவது மனித குலத்தின் நாகரீகக் கூர்ப்பை ஒரு வைரஸ் சோதனைக்கு உள்ளாக்கியிருக்கிறது. மனிதர்களோடு சேரந்து கிருமிகளும் கூர்ப்படைகின்றவா?

ஆனால் கொரோனா வைரஸை எதிர்கொள்வதற்காக மனிதர்களை தனிமைப்படுத்தி உதிரிகள் ஆக்குவதை விடவும் மனிதர்களுக்கு இடையிலான சமூகக் கூட்டொருமைப்பாட்டை ((solidarity) ) வளர்த்தெடுப்பதே இப்போதைய அவசியத் தேவை என்று அமெரிக்க சமூகவியலாளர் கலாநிதி கிளினேன்பெர்க் கூறியிருக்கிறார். எங்களுக்கு தேவையாக இருப்பது சமூகத் தனிமைப்படுத்தல் அல்ல சமூக கூட்டொருமைப்பாடே என்று அவர் கூறியிருக்கிறார் (https://www.nyitmes.com/2020/03/14/opinion/coronavirussocial distnacig.nhtml) சில நாட்களுக்கு முன் பிரான்சில் கொரோனா வைரசுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்த அந்நாட்டின் ஜனாதிபதி பிரெஞ்சு மக்களை ஒரு தேசமாக திரள வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவர் அவ்வாறு கூறுவதற்கு சில நாட்களுக்கு முன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சார்க் நாடுகளை இலத்திரனியல் கருத்தரங்கின் மூலம் ஒன்றுகூட்டி சார்க் நாடுகள் ஒரு திரளாக வைரஸை எதிர்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார். கொரோனா வைரசுக்கு எதிரான ஒரு பிராந்தியத்தின் கூட்டு நடவடிக்கை அது. கொரோனாவை ஒரு பிராந்தியமாக எதிர்கொள்ளும் ஒரு முன் முயற்சி அது. கொரோனா வைரஸ் ஒரு உலகப் பொதுச் சவால். அதற்கு மொழி இல்லை, இனம் இல்லை, மதம் இல்லை, அரசியல் எல்லைகள் இல்லை, தேசிய எல்லைகள் இல்லை. எனவே அதை எதிர்கொள்வதற்கான உழைப்பும் ஒரு கூட்டு உழைப்பாக இருக்க வேண்டும். அதைப் பிராந்தியங்களாக கண்டங்களாக உலக சமூகம் முழுவதுமாகத்தான் எதிர்கொள்ள வேண்டும்.

“நெப்போலியனால் ரஷ்யாவை வெற்றி கொள்ள முடியவில்லை. ஹிட்லரால் ரஷ்யாவை வெற்றி கொள்ள முடியவில்லை. ஆனால் பிளேக் நோய் ரஷ்யாவை வெற்றி கொண்டது” என்று பேராசிரியர் பெனெடிக்டோவ் கூறுகிறார்.

பிளேக் நோய் அளவுக்கு அல்லது ஸ்பானிஸ் ஃப்ளு அளவுக்கு அல்லது எபோலா அளவுக்கு கொரோனா வைரஸ் இதுவரையிலும் சேதத்தை ஏற்படுத்தவில்லை. எனினும் பூகோள மயப்பட்ட உலகில் நோய்த் தொற்றைக் குறித்த அச்சம் நோயை விட வேகமாக பரவுகிறது. அதுகுறித்த வதந்திகளும் மூடநம்பிக்கைகளும் அதை விட வேகமாகப் பரவுகின்றன. சமூக வலைத்தளங்களில் பெருமளவுக்கு ஆக்கிரமித்து இருப்பது சாமானியர்களே. எனவே இது தொடர்பில் நிபுணத்துவ அறிவு மிகக் குறைந்த அளவுக்கே பரவுகிறது. இப்படிப்பட்ட சமூகப் பொருளாதார தொழில்நுட்ப மருத்துவ பின்னணியில் ஓர் உலகப் பெருந் தொற்று நோயின் தொற்று வேகத்தை சமூகத் தனிமைப்படுத்தல் மூலம் தடுக்கலாம். எனினும் அதற்கு எதிரான இறுதி வெற்றி எனப்படுவது சமூகக் கூட்டொருமைப்பாடு மூலமே கிடைக்கும். சீனாவில் முதலில் தொற்றுத் தொடங்கிய வுகான் மாகாணத்தில் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக கிட்டத்தட்ட 40000 தொண்டர்கள் வெளி மாகாணங்களிலிருந்து வந்தார்கள். சில நாள்ளுக்கு முன் அவர்கள் தத்தமது மாகாணங்களுக்குத் திரும்பிச் சென்றபோது அவர்களுக்கு சீனப் படைகள் சல்யூட் அடித்து வழியனுப்பி வைத்தன.

இயற்கை அனர்த்தங்களின் போது எப்படி சமூகக் கூட்டொருமைப்பாடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள அரணாகவும் தெம்பாகவும் அமைகிறதோ அப்படித்தான் உலகப் பெரும் தொற்று நோய்களின் போதும் கூட்டொருமைப்பாடு அந்த நோயை எதிர்கொள்வதற்கு வேண்டிய உளவியல் பலத்தை வழங்கும். தனிமைப்படுத்தப் பட்டிருக்கும் நோயாளர்களுக்கும் நோய்க்கு அதிகம் இலக்காகக் கூடியவர்கள் என்று கருதப்படுகின்ற சமூகத்தின் மிகவும் பலவீனமான தரப்புகளுக்கும் உதவி செய்வதன் மூலம் சமூகக் கூட்டொருமைப்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கலாநிதி கிளி னேன் பெர்க் கூறுகிறார்.

இதற்கு மற்றொரு உதாரணம் கியூபா. நடுக்கடலில் சில கொரோனாத் தொற்று உடையவர்களோடு தத்தளித்துக் கொண்டிருந்த பிரித்தானிய பயணிகள் கப்பல் ஒன்றை தமது துறைமுகங்களுக்குள் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அனுமதிக்கவில்லை. ஆனால் கியூபா இது விடயத்தில் ரிஸ்க் எடுத்தது. துணிந்து அந்தக் கப்பலுக்கு தனது துறைமுகத்தை திறந்துவிட்டது. இதன் மூலம் அது உலகளாவிய ஐக்கியத்தை நிரூபித்திருக்கிறது. “இது கூட்டொரு மைப்பாட்டிற்கான நேரம். சுகாதாரத்தை ஒரு மனித உரிமையாக புரிந்து கொள்வதற்கான நேரம். உலகப் பொதுச் சவால்களை எதிர்கொள்வதற்கு அனைத்துலக கூட்டிணைவை மேலும் பலப்படுத்துவதற்கான நேரம். எமது மக்களுடைய புரட்சியின் மனிதாபிமான நடைமுறையின் இயல்பான விழுமியங்களின் நேரம்” என்று கியுப வெளியுறவு அமைச்சு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. எபோலாவைக் கட்டுப்படுத்துவதிலும் கியுபாதான் துணிந்து ஆபிரிக்காவுக்குள் இறங்கியது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை கியூபா யுத்த காலத்திலும் ஐ.நா.வில் மனித உரிமைகள் பேரவையிலும் ஈழத் தமிழர்களின் பக்கம் நிற்கவில்லை. எனினும் ஓர் உலகப் பொது நோயை எதிர்கொள்வதில் கியூபா காட்டும் முன்னுதாரணம் பாராட்டப்பட வேண்டியது.

தகவல் தொழில்நுட்பம் ஒருபுறம் மக்களை தனியன்கள் ஆக்குகிறது. உதிரிகள் ஆக்குகிறது. இன்னொருபுறம் அது அவர்களை இலத்திரனியல் திரட்சி ஆக்குகிறது. ஒரே சமயத்தில் அது மக்களைத் திரட்டுகிறது உதிரிகளும் ஆக்குகிறது. இப்பொழுது ஓர் உலகப் பெரும் தொற்று நோயா னது மனிதனை முன்னெப்போதையும் விட தனித்து இருக்குமாறு செய்துவிட்டது. எனி னும் உலகளாவிய ஐக்கியத்தின் மூலமே தனிமைச் சிறையிலிருந்து மனிதகுலம் விடுதலை பெற முடியும்.



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் புது அனுபவம் உண்டா கும். பழைய கடன் பிரச்சினை கட்டுக் குள் வரும்.

**இடபம்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சிதங்கும். இழுபறியாக இருந்தவேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புக்கள் தேடி வரும்.

**சிம்மம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கன்னி:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பழைய சிக்கல்கள் தீரும்.

**துலாம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லைகுறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்று வீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரர் உதவுவார். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும்.

**தனுசு:** துணிச்சலாக சில முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**மகரம்:** கணவன்மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். நீண்ட நாள்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும்.

**கும்பம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அநாவசிய பேச்சை தவிர்ப்பதுநல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் தன்னை புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப் படுவீர்கள். சிறு சிறு அவமானம் ஏற்படக் கூடும்.

**மீனம்:** விடாப் பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்பு குறையும். உடல் நலத்தில் கவனம் தேவை.

# கொரோனாவின் பிடியை உடைத்தெறிந்தது வுகான்



**பீஜிங், மார்ச் 22**
**ஒட்டுமொத்த உலகையும் பெரும் கிலிக்கு உட்படுத்திவரும் கொரோனா வைரஸ் தோற்றம் பெற்ற பகுதியான சீனாவின் வுகான் மாகாணம் கொரோனாவின் கோரப் பிடியில் இருந்து முழுதுமாக விடுபட்டுள்ளது.**

டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் சீனாவின் வுகான் மாகாணத்தில் தான் கொரோனா முதன்முதல் அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் வுகான் எங்கும் கொரோனா தீவிரமாகப் பரவியது. பின்னர் சீனாவில் பரவி அதன் பின்னர் சீனாவில் இருந்து ஏனைய நாடுகளில் வேரூன்றியது.
கொரோனாவைக் கட்டுப்படுத்த சீன அரசு பல்வேறு இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக கொரோனா தோற்றம்பெற்ற வுகான் மாகாணத்தில் கொரோனா நோயாளர்கள் எவரும் புதிதாக இனங்காணப்படவில்லை. வுகானில் ஏற்கனவே சிகிச்சை பெற்றுவரும் பலரின் உடல் நிலையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இளைஞர்களும் இரையாவீர்கள்!

*கொரோனா குறித்து எச்சரிக்கை*

வொஷிங்டன், மார்ச் 22
கொரோனா வைரஸ் முதியவர்களையும், சிறுவர்களையும் மட்டுமே தாக்கும். இளைஞர்களை



அது தாக்காது என்றவாறாக வெளிவரும் தகவல் உண்மைக்குப் புறம்பானது. இளைஞர்களும் கொரோனாவால் மிகையாகப் பாதிக்கப்படுவார்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
இன்று இளைஞர்களுக்காக ஒரு தகவலைக் கூறுகிறோம். கொரோனாவில் இருந்து நீங்களும் தப்பிக்க முடியாது. கொரோனா வைரஸானது உங்களை வாரக்கணக்கில் மருத்துவமனையில் முடக்கி விடலாம். உயிரிழப்பைக்கூட ஏற்படுத்தலாம். எனவே எங்குசென்றாலும் அவதானத்துடன் இருங்கள் என்றுள்ளது. (ம)

# ஆறு மாதங்களுக்கு ஆறாது காயங்கள்!

*பிரேசில் அதிபர் உருக்கம்*




பிரேசிலியா, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி முன்பைப் போன்று மீண்டு வருவதற்கு ஆறு மாதங்கள் தேவை என்று தெரிவித்துள்ளார் பிரேசில் அதிபர் போல்சனரோ.
கொரோனாவால் தென்னமெரிக்க நாடான பிரேசில் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ, தலைநகர் பிரேசிலியா உள்ளிட்ட வர்த்தக நகரங்களில் கொரோனா தாண்டவம் ஆடுவதற்கு வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில் கொரோனாவால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டு வருவதற்கு ஆறு மாதங்கள் ஆகும் என்றுள்ளார் போல்சனரோ.
பிரேசிலில் கொரோனாவால் சுமார் 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் இறந்துள்ளனர். (ம)

# மருத்துவருக்காக மண்டியிட்ட சீனா

பீஜிங், மார்ச் 22
உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் குறித்து முதலில் எச்சரிக்கை விடுத்திருந்த சீன மருத்துவர் லி வென்லியாங் அந்த வைரஸால் உயிரிழந்திருந்தார். தற்போது அவரது குடும்பத்தினரிடம் சீன அரசு மன்னிப்பு கேட்டுள்ளது.
வுகானில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றி வந்த மருத்துவரான லி வென்லியாங், கடந்த ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதிக்கு முன்பாகவே, சார்ஸ் போன்ற புதிய வைரஸ் சீனாவில் பரவுவதாக தனது நண்பர்களிடமும், சமூக வலைதளங்களிலும் பகிர்ந்திருந்தார்.
ஆனால், லி வென்லியாங்கை அழைத்த சீன பொலிஸார் இது போன்ற வதந்திகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும் என்று எச்சரித்தனர். எனினும், லி வென்லியாங் எச்சரிக்கை விடுத்தது போலவே, கொரோனா வைரஸ் சீனாவில் வேகமாகப் பரவியது. இதில் லி வென்லியாங்கின் உயிரும் பறிபோனது. தற்போது உலகம் முழுவதும் கொரோனா ஆழமாக வேரூன்றிவிட்டது. இந்த நிலையில் அந்த மருத்துவரின் குடும்பத்திடம் சீன அரசு மன்னிப்புக் கேட்டுள்ளது. (ம)



# வியக்க வைக்கிறது ஜேர்மனியின் போர்!

பெர்லின், மார்ச் 22
கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஐந்தாவது இடத்தில் ஜேர்மனி இருந்தாலும், உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதில் அந்த நாடு கடும் போராட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.
நேற்று மாலை வரையில் வல்லரசு நாடான அமெரிக்காவில் 10 ஆயிரத்து 427 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு 150 பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதிலும் உயிரிழப்பை தடுப்பதிலும் அமெரிக்காவே திணறி வருகிறது. பிரிட்டனில் 3 ஆயிரத்து 269 பேர் வைரஸ் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுகின்றனர். அந்த நாட்டில் இதுவரை 144 பேர் உயிரிழந்திருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் 20 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. அதேநேரம் அந்த நாட்டில் உயிரிழப்பு எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இதுவரை 68 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர். இது உலக நாடுகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.



கொரோனா வைரஸ் தொற்று அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் ஜேர்மனி 5ஆவது இடத்தில் உள்ளது. ஆனால் உயிரிழப்பு பட்டியலில் 10ஆவது இடத்தில் இருக்கிறது.
இதுகுறித்து ஐரோப்பிய மருத்துவ நிபுணர்கள் கூறியதாவது:
பிரிட்டன் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருத்துவக் கருவிகளுடன் 4 ஆயிரம் படுக்கைகள் மட்டுமே உள்ளன. பிரான்ஸில் 7 ஆயிரம் படுக்கைகள் உள்ளன. இத்தாலியில் 5 ஆயிரம் படுக்கைகள் உள்ளன. கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் நோயாளிகள் சுவாசக் கோளாறினால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர்.
அவசர சிகிச்சைப் பிரிவுகளில் போதிய படுக்கை வசதிகள் இல்லாததால் பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் சுழற்சி அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதாவது உயிர் பிழைக்கும் வாய்ப்புள்ள நோயாளிகளுக்கு மட்டுமே தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதர நோயாளிகளுக்கு சாதாரண சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன.
அதேநேரம் ஜேர்மனியில் உள்ள மருத்துவமனைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளில் உயிர் காக்கும் கருவிகளுடன் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படுக்கைகள் உள்ளன. இதனால் கொரோனா வைரஸ் காய்ச்சல் நோயாளிகள் அனைவருக்கும் ஜேர்மனியால் சிகிச்சை வழங்க முடிகின்றது - என்றனர். (ம)

# கோவாவில் 144 தடை!

புதுடெல்லி, மார்ச் 22
கொரோனா வைரஸ் காரணமாக கோவாவில் 144 தடை உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.
கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியாவின் மாநிலங்கள் தனித்தனியான கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்தியாவில் இன்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் நேற்றையதினம் கோவாவில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்தியவசியப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் கொண்டுவரும் பேருந்துகள் மட்டும் கோவாவுக்கு நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம)





# இந்தியா இன்று உறங்குகின்றது

புதுடெல்லி, மார்ச் 22
இந்தியாவின் இன்று முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு எதிரான இறுக்கமான பொறிமுறை உருவாக்கப்பட இந்த ஊரடங்கு அவசியம் என்று இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 7 மணிமுதல் இரவு 9 மணிவரை இந்த ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர வேறெதற்காகவும் வீடுகளை விட்டு வெளியில் வரவேண்டாம். கொரோனாவுக்கு எதிரான செயற்பாடுகளில் இந்த ஊரடங்கு என்பது தவிர்க்க முடியாததாக அமைந்துள்ளது. பொதுமக்கள் வீடுகளுக்குள் இருந்து அரசின் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ரயில்கள், அரச வாகனங்கள், அரச திணைக்களங்கள் என அனைத்தையும் சுத்தப்படுத்தும் பணிகளும் இன்று முன்னெடுக்கப்படும். எவராவது தேவையற்ற விதத்தில் நடமாடினால் வழக்குத் தொடரப்படும் - என்று இந்திய அரசின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# இந்தியாவில் பாதிப்பு 298 உயிரிழப்பு 5

புதுடெல்லி, மார்ச் 22
கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் என 49 பேர் நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
ஆசிய நாடுகளில் இந்தியாவிலும் கொரோனாவின் தாக்கம் பெரிதும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகின்றது. நேற்று முன்தினம் 249 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தனர். நேற்று 49 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 283ஆக அதிகரித்தது. அவர்களில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். 23 பேர் நலம் பெற்றுள்ளனர். (ம)



# 30 கோடி பிஞ்சுகளின் உணவைப் பறித்த கொரோனா!

புதுடெல்லி, மார்ச் 22
கொரோனா வைரஸ் காரணமாக பெரும்பாலான பள்ளிகள் மூடப்பட்டிருப்பதால் 30 கோடி குழந்தைகள் மதிய உணவை இழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக உலக உணவு அமைப்பின் செய்தித் தொடர்பாளர் எலிசபெத் பைர்ஸ் தெரிவித்ததாவது: 'உலகம் முழுவதும் பெரும்பாலான பள்ளிகளில் இலவச மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் பள்ளிகள் மூடப்பட்டிருப்பதால், குழந்தைகள் பள்ளிக்கு வருவதில்லை. இதனால் சுமார் 30 கோடி குழந்தைகள் மதிய உணவு இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பான மாற்றுவழிகளை ஐ.நா ஆராய்ந்து வருகிறது. ஐ.நா. மூலம் 61 நாடுகளில் சுமார் 9 கோடி குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. எனினும் இது போதாது. வீடுகளுக்கே பொருட்களை வழங்குவது, மதிய உணவை வீட்டுக்குக் கொண்டு சென்று அளிப்பது, உணவுக்காக பணம் அல்லது வவுச்சர்களை வழங்குவது உள்ளிட்ட மாற்று வழிகள் குறித்து யோசித்து வருகிறோம்' -என்றார். (ம)



# சங்கத்த கலைங்க!

## தனக்கேற்ற பாணியில் வடிவேலு 'அட்வைஸ்'



புதுடெல்லி, மார்ச் 22
கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை உலகப் பிரபலங்கள் பலரும் மேற்கொண்டு வரும் நிலையில், தனது பாணியிலேயே மக்களுக்கு சில விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் நகைச்சுவை நடிகர் வடிவேலு.
அவர் பேசியதிலிருந்து..
கொரோனா பாதிப்பு ஆரம்பித்த நாள் முதலே இந்திய மக்கள் அரண்டு மிரண்டுபோய் இருக்கிறார்கள். காரணம் மொழி புரியாம வந்த விழிப்புணர்வு ரிங்டோன். ரிங்டோனில் இருமலுடன் அறிவுரை வந்தாலும் வந்தது யார் இருமினாலும் அவர்களைக் குறுகுறு வென்று பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். பயப்படாதீர்கள். ஆனால் விழிப்புணர்வோடு இருங்கள்.
நல்லா கிளப்புறாய்ங்கயா பீதியன்னு நான் விளையாட்டாக சொன்னது இப்ப உலகம் முழுவதுமே உண்மையிலேயே நடக்குது.
நான் கூட ஒரு படத்தில் 'தேக்குடா முடியுமா' என்றொரு டயலாக் பேசியிருப்பேன். ஆனால் நிஜத்தில் அதெல்லாம் எடுபடாது. தேக்குடா என்றெல்லாம் பேசி அசட்டையா இல்லாம விழிப்போடு இருங்க. வெளிநாட்டில் இருந்து என் நண்பர்கள் ஏன் தமிழ்நாட்டு மக்கள் இப்படி அசட்டையா உள்ளனர் என்று கேட்கிறார்கள். தயவு செய்து கவனமா இருங்க ரோட்டில் சளி துப்புவது, சிறுநீர் கழிப்பது போன்ற பழக்கங்களைக் கைவிடுங்கள். எளிமையாக சொல்ல வேண்டும் என்றால் கூட்டம் கூடாதீங்க, சங்கத்த கலைங்க, டிஸ்டன்ஸ் மெயின்டெய்ன் பண்ணுங்க. கை, கால்களை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொண்டால் மருத்துவர்களுக்கு சிரமம் குறையும் - என்றார். (ம)



# ஒரு நாளில் ஒரு கோடி முகக்கவசங்கள் தயார்

புதுடெல்லி, மார்ச் 22
இந்தியாவில் ஒருநாளில் ஒரு கோடி முகக் கவசங்கள் தயாரிக்கப்படவேண்டும் என்று இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
மத்திய அமைச்சர் மான்சுக் இது தொடர்பில் தெரிவித்தாவது:
கொரோனாவை எதிர்கொள்ள அனைத்துக்கும் தயாராகவே உள்ளோம். ஒரு நாளில் குறைந்த பட்சம் ஒரு கோடி முகக் கவசங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் நாம் சுமார் ஒன்றரைக்கோடி முகக் கவசங்களை உற்பத்தி செய்து வருகின்றோம். அத்துடன் தூய்மைப்படுத்தலுடன் தொடர்புடைய சாதனங்களின் விலைகளைக் குறைக்கவும் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ம)




# ஒலிம்பிக் நடக்கும்!

## அபே அழுத்தம் திருத்தம்



டோக்கியோ, மார்ச் 22

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இந்த ஆண்டு நடத்தத் திட்டமிட்ட ஒலிம்பிக் தொடர்கள் திட்டமிட்டபடி இடம்பெறும். அதில் எந்த மாற்றமும் இருக்காது என்று தெரிவித்துள்ளார் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே.

ஒலிம்பிக் தொடர் தொடர்பில் அபே மேலும் தெரிவித்ததாவது:

உலகை ஆக்கிரமித்துள்ள கொரோனா வைரஸ் ஒலிம்பிக் தொடருக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது. இதனால் இந்தத் தொடர் நடைபெறுமா என்பது தொடர்பில் பலரும் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர். சிலர் தொடர் இடம்பெற வாய்ப்பில்லை என்றவாறாகவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஒலிம்பிக் தொடரை நடத்துவதில் ஜப்பான் பின்வாங்கவில்லை. உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக்கை நடத்த நாம் அனைவரும் முனைப்புக் கொண்டுள்ளோம். எனவே தேவையற்ற சந்தேகங்களை விடுங்கள். கொரோனாவின் பிடியில் இருந்து விடுபட்ட கொண்டாட்டமாக ஒலிம்பிக் அமையும் என்றார். (ம)

# பொறுப்புணர்ந்து செயற்படுவோம்!

## கோலி, அனுஸ்கா கூட்டுக் கோரிக்கை

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக மக்கள் ஒவ்வொருவரும் தங்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறு கோரியுள்ளார் இந்திய அணியின் தலைவர் கோலி. அவரது மனைவியும் நடிகையுமான அனுஸ்காவும் கோலியுடன் அதே வீடியோவில் தோன்றி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொரோனா வைரசை கட்டுப்படுத்த நாம் அனைவரும் போராட வேண்டும். அதற்காக மிகவும் எச்சரிக்கையுடனும், விழிப்புணர்வுடனும் செயல்பட வேண்டும். நாம் அனைவரும் பொறுப்புள்ள குடிமக்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம)



# துணிந்திரு தனித்திரு!

## போல்ட் அறிவுரை

கொரோனா வைரஸால் மக்கள் அச்சமடைய வேண்டாம். அதேநேரம் கவனக்குறைவாகவும் இருக்க வேண்டாம். தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகளுடன் அனைவரும் தனிமைப்பட்டு இருக்கவேண்டும். இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்டப்பந்தய வீரர் போல்ட்.

போல்ட் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவை எதிர்கொள்ள உலகம் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றது. கொரோனாவுக்கு எதிராக உலகநாடுகள் தம்மால் இயன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மக்கள் இந்த வைரஸ் அரக்கனை துணிச்சலாக எதிர்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தம்மை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும்- என்றார். (ம)

# மெஸ்ஸியின் முயற்சி

தனிமைப்படுத்தலை ஊக்குவிக்கும் வகையில் ஆர்ஜென்ரீன கால்பந்தாட்ட அணியின் தலைவர் மெஸ்ஸி சமூக வலைத்தளங்களில் சவாலொன்றை விடுத்துள்ளார்.

வீடியோவொன்றில் தோன்றி உரையாற்றும் மெஸ்ஸி கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வுப் பரப்புரையை மேற்கொண்ட பின்னர், ரொய்லெட் பேப்பர் சுருள் ஒன்றை கால்பந்துக்குப் பதிலாகப் பயன்படுத்தி அதை நிலத்தில் விழாத வகையில் விளையாடுகின்றார். பின்னர் தன் சக வீரர்களும் ரசிகர்களும் வீட்டிலிருந்தவாறு இதுபோன்று ஏதாவதை முயற்சி செய்ய வேண்டும், வெளியில் செல்லக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

பல்லாயிரம் ரசிகர்கள் மெஸ்ஸியின் சவாலை ஏற்றுக்கொண்டு அவர் விளையாடுவது போன்று தாமும் செய்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். (ம)







# கிரிக்கெட்டின் தாயகத்தில் கிரிக்கெட்டுக்குத் தடையா!



இங்கிலாந்தில் எதிர்வரும் மே மாதம் 28ஆம் திகதி வரை கிரிக்கெட் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுகிறது. அங்கு உயிரிழப்பும் ஏற்பட்டு பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இங்கிலாந்தில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கால்பந்து போட்டிகள் கைவிடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியமும் கொரோனா வைரஸ் காரணமாக கிரிக்கெட் போட்டிகளை நடத்த வேண்டாம் என்று அறிவித்துள்ளது. (ம)

# ஐ.பி.எல் தொடர் தொடர்பாக நாளை மறுதினம் ஆலோசனை

ஐ.பி.எல் தொடரை நடத்துவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் அணிகளின் உரிமையாளர்கள் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இடையில் நாளை மறுதினம் பேச்சு நடத்தப்படவுள்ளது. இந்த வருடம் நடைபெறுவதாக இருந்த ஐ.பி.எல் தொடர் கொரோனா காரணமாகப் பிற்போடப்பட்டது. இதனால் தொடர் மீண்டும் நடைபெறுமா? அல்லது இல்லையா? என்பது தொடர்ந்து விவாதங்களுக்கு உரியதொன்றாகவே உள்ளது. இந்த நிலையில் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் 8 அணிகளின் உரிமையாளர்கள் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகளுக்கு இடையில் நாளை மறுதினம் பேச்சு நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சின் அடிப்படையில் தொடரை நடத்துவதா? நடத்துவதாயின் என்ன அடிப்படையில் தொடர் இடம்பெறும்? என்ற முடிவுகள் எடுக்கப்பட வாய்ப்புண்டு எனக் கருதப்படுகின்றது. (ம)




இந்தப் பத்திரிகை 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவெட் நிறுவனத்தால் 22.03.2020 அன்று வெளியிடப்பட்டது.